செ.வெ.எண்.64 நாள்.23.09.2026

**புதுக்கோட்டை மாவட்டம்**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் இளைஞர் நீதிக்குழுமத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் இளநிலை உதவியாளருடன் இணைந்த ஆவண எழுத்தர், அலுவலக உதவியாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

தமிழ்நாடு அரசு, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை மிசன் வத்சால்யா குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் இளைஞர் நீதிக்குழுமத்திற்கு புதிதாக கீழ்கண்ட பட்டியலில் உள்ள பணியிடத்தினை முற்றிலும் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்திட புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகிறது.

பதவியின் பெயர், இளநிலை உதவியாளருடன் இணைந்த ஆவண எழுத்தர், பதவியின் எண்ணிக்கை-1, ஒப்பந்த ஊதியம் மாதத்திற்கு ரூ. 20,000. அலுவலக உதவியாளர் பதவியின் எண்ணிக்கை-1, ஒப்பந்த ஊதியம் மாதத்திற்கு ரூ. 13,000

**கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பு.** இளநிலை உதவியாளருடன் இணைந்த ஆவண எழுத்தர் (Junior Assistant Cum Record Clerk) 10-ஆம் வகுப்பு அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 42 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். அலுவலக உதவியாளர் (Office Assistant), 8-ஆம் வகுப்பு அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 42 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் https://pudukkottai.nic.in/ என்ற இணையதள முகவரியில் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவத்தினை அனைத்து கல்வி சான்றிதழ்களின் நகல்களுடன் இணைத்து நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ

30.09.2026 அன்று மாலை 5.30 மணிக்குள் கீழ்கண்ட முகவரிக்கு கிடைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, முன்னாள்படை வீரர்கள்மைய வளாகம், கல்யாணராமபுரம் 1-ஆம் வீதி, புதுக்கோட்டை - 2. தொலைபேசி எண்-04322-221266.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai